செய்யப்பட வேண்டும். ஆர்ஜிதம் செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல், அதற்கு 15 மீட்டர் அகலத்திற்கு ரோடு போட வேண்டும். அவற்றில் ரோடு போடுவதற்கு இன்றைக்கு 3 கோடியே 3 இலட்சம் செலவாகும் என்று கரும்பு அபிவிருத்தித் துறையைச் சார்ந்த பொறியியல் வல்லுநர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த 3 கோடி ரூபாய் இன்றைக்கு அந்தத் துறையிலே கையிருப்பு இல்லாத காரணத்தினால் முடியாது என்ற பதிலை மாண்புமிகு உறுப்பினருக்குத் தந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

35—

உத்திரமேரூர் தொகுதியில் பால் குளிரூட்டும் தொழிற்சாலை அமைத்தல்

*** 35947**—திரு. காஞ்சி பன்னீர்செல்வம்:

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதியில் பால் குளிரூட்டும் தொழிற்சாலை (Chilling Centre) அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது தேசிய பால்வள வாரியம் மூலம் உத்திரமேரூரிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சாலூர் என்ற இடத்தில் புதிதாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படவுள்ளதால், உத்திரமேரூர் தொகுதியில் தற்போது பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உத்திரமேரூருக்கு அருகே தனி குளிரூட்டும் நிலையம் அமைக்க இருப்பதால் உத்திரமேரூரிலே அமைக்க இயலாது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி உத்திரமேரூர் பகுதியிலே அமைக்க இயலவில்லை என்று சொன்னாலும் அடுத்து என்னுடைய தொகுதியிலே வாலாஜாபாத் நகரம் இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு குளிரூட்டும் நிலையத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உத்திரமேரூர் தொகுதிக்கு உட்பட்ட உத்திரமேரூர்

ஒன்றியத்தில் 8100 லிட்டர் பால் உற்பத்தி ஆகிறது. அவர்கள் குறிப்பிடுகின்ற வாலாஜாபாத் பகுதியில் 810 லிட்டர் தான் உற்பத்தியாகிறது. அதனால் அங்கு புதிதாகக் குளிரூட்டும் நிலையம் துவக்க இயலாது.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர் கூறுகின்ற அந்தக் கோரிக்கையை நான் ஏற்றுக்கொண்டு, பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருமக்களிடத்திலிருந்து நிறைய பாலை நம்முடைய சங்கத்திலே ஊற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து உற்பத்தியை அதிகம் பெருக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுவேன். அதைச் செய்தால் நம்முடைய அமைச்சரவர்கள் அந்தப் பகுதியிலே குளிரூட்டும் நிலையத்தை அமைப்பதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: உற்பத்தி அதிகரிக்குமானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 36, திரு. வீ. சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

36—

விக்கிரவாண்டி பேரூராட்சிக்கு அருகில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைத்தல்

* **37496**—திரு. வீ. சுப்பிரமணியன்:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம், விக்ரவாண்டி பேரூராட்சிக்கு அருகில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம் பகுதியில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பில் ஒரு புதிய தொழில் வளர்ச்சி வளாகம் ஒன்றை அமைக்கும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. அந்தத் தொழில் வளாகத்திற்கான இடத்தைத் தெரிவு செய்யும் ஆய்வுப் பணிகள் தற்சமயம் வேகமாக நடந்து வருகின்றன.